ராம்கோ சிமெண்ட் நிறுவனத்துக்கு சென்னை தொழில்துறை வர்த்தக சபை விருது

சென்னை, பிப்.10–

அரியலூர் மாவட்டத்தில் சுத்தம் – சுகாதாரம் பேணுவதற்கு, ராம்கோ சிமெண்ட் சார்பில், பல்வேறு இடங்களில் ஸ்மார்ட் கழிவறைகள் நிறுவப்பட்டுள்ளது. இதை நிறுவியதற்கு சென்னை தொழில்துறை வர்த்தக சபை சாதனை விருது, ராம்கோ சிமெண்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தின் சீனியர் துணைத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் சமூகப் பொறுப்பு துறை உதவி மேலாளர் விஷ்ணு ஆகியோரிடம் கவின் கேர் நிறுவனத்தின் சேர்மன் சி. கே. ரங்கநாதன் வழங்கினார்.

ராம்கோ சிமெண்ட் நிறுவனம் அரியலூர் மாவட்டத்தில் தொண்டு நிறுவனத்தின் கூட்டுடன் மக்கள் நலனுக்காக சமூக நல திட்டமான ஸ்மார்ட் கழிப்பறை நிறுவி உள்ளது.

இதற்கு சென்னை தொழில்துறை வர்த்தக சபை ஆய்வு செய்து சமூக நல அக்கறையில் ராம்கோ சிமெண்ட்ஸ் ஈடுபாட்டுடன் செயல்பட்டதற்காக இந்த விருது வழங்கப்பட்டது.

சென்னை துறைமுகம் சரக்கு இறக்குமதியில் சாதனை

சென்னை, பிப்.10–

ஸ்டீல் உற்பத்தி தொழிற்சாலைக்கு தேவைப்படும் மூலப் பொருளான மில் ஸ்கேல் என்னும் பொருளை சென்னை துறைமுகம் இதுவரை இல்லாத அளவில் ஒரே நாளில் எம். வி. கிரேஸ் என்னும் கப்பலில் இருந்து ஜவகர் இறங்கு தளம் 6ல் 24,200 டன் இறக்குமதி செய்து சாதனை படைத்துள்ளது என்று சேர்மன் சுனில் பாலிவால் தெரிவித்தார்.

ஏற்கனவே 2016ஆம் ஆண்டில் சாந்தாங் ஹாய் செங் என்னும் கப்பலில் இருந்து ஒரே நாளில் 18 ஆயிரத்து 700 டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சரக்கு கையாளும் கப்பல் ஏஜென்ட் அட்லாண்டிக் குளோபல் ஷிப்பிங் மற்றும் பி. எல். ட்ரான்ஸ்போர்ட் மற்றும் ஜிம் டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றையும் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரை சுனில் பாலிவால் பாராட்டினார்.



அரசு பள்ளி மாணவிகளின் சுகாதாரத்தை மேம்படுத்த சத்யபாமா பல்கலைக்கழகம் புதிய திட்டம்: வேந்தர் மரியஜீனா ஜான்சன், நடிகை நயன்தாரா துவக்கினர்

சென்னை, பிப்.10–

அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் "மதுகை" என்ற திட்டத்தை சத்யபாமா பல்கலைகழகத்தின் பிராண்ட் அம்பாஸடர் நயன்தாரா, வேந்தர் மரியஜீனா ஜான்சன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

சுகாதாரப் பொருட்கள் மற்றும் அதிக கலோரி சத்துக்கள் அடங்கிய தொகுப்புகளை விநியோகிப்பதன் மூலம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் இந்த திட்டம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்று இருவரும் தெரிவித்தனர்.

சத்யபாமா இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி 35ம் ஆண்டு கலாச்சார விழா கொண்டாடியது. மரியஜீனா ஜான்சன், தலைவர் மரிய ஜான்சன் மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து தன் அன்பான வார்த்தைகளால் ஊக்கப்படுத்தினார். அதேபோல் துணைத் தலைவர்கள் மரியா பெர்னாட்டி தமிழரசி, ஜெ.அருள் செல்வன், மரிய கேத்தரின் ஜெயப்பிரியா ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

தென்னிந்திய சினிமாவின் லேடி சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் நயன்தாராவை "சத்யபாமா பிராண்ட் அம்பாஸ்டர் 2023" என்று மரியஜீனா ஜான்சன் சமீபத்தில் அறிவித்தார்.

முதற்கட்டமாக 15 அரசுப் பள்ளிகள் பல்கலைக்கழகத்தின் வேந்தரால் தத்தெடுக்கப்பட்ட 5 கிராமங்கள் இதனால் பயனடைகின்றன.

35 வருட சத்யபாமா பயணத்தை வழங்கும் ஒரு அசத்தலான "லேசர் ஷோ" அனைத்து மாணவர்களையும், ஊழியர்களையும் வியப்பில் ஆழ்த்தியது.

இந்நிகழ்ச்சியில் சத்திய பாமா கல்வி குழுமத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் பணியாளர்களுக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் மரிய ஜீனா ஜான்சன், தலைவர் மரிய ஜான்சன் ஆகியோரால் நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.